**தலைப்பு 250 – அரச கணக்குகள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

அரச கணக்குகள் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தொழில் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 மே 31ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 திசெம்பர் 10 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க தகவல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமான தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டது.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன என்பது.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது 06 செலவின விடயங்களுக்குரியதாக ரூபா 34,472,000 ஆன நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த நிதியேற்பாட்டினை பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 28,449,851 ஆன நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. அந்த சேமிப்பு ஏற்பாடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டின் 34 சதவீதம் முதல் 91 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | வருடாந்த மதிப்பீடுகளினூடாக மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்படுதல் கட்டுப்படுத்தப்பட வேண்டும். | எதிர்பார்த்த செலவினங்கள் இடம்பெறாமையால் நிதியேற்பாடுகள் எஞ்சியுள்ளன. |

## 2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுத்தப்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 27ஆந் திகதிய 255/2017ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 02(ஈ) பந்தியின் அறிவுரைகளுக்கு முரணாக திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் இறுதியளவில் 04 செலவின விடயங்களின் கீழ் ரூபா 136,066 கூட்டுத்தொகையான பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், பொறுப்புகளை கணக்கு வைத்தல் முறைமைப்படுத்தப்பட வேண்டும். | இந்த பொறுப்புகள் 2019ஆம் ஆண்டிற்குரியவை என்பதுடன், கணக்காண்டினுள் எழுந்தவையல்ல. குறித்த உரித்துக்கோரல் 2020ஆம் ஆண்டில் இடம்பெற்றமையால் கணக்காண்டினுள் தீர்ப்பனவு செய்ய இயலாது. |

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பிலான இணக்கக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மரணமடைந்த உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து 10 வருட காலமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 164,953 ஆன கடன்அமீதி மற்றும் சேவையை விட்டுச்சென்ற உத்தியோகத்தர் ஒருடவரிடமிருந்து 06 வருடங்களாக முன்கொண்டுவரப்படும் ரூபா 132,846 ஆன கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைக் கடடன் மீதிகளை அறவீடு செய்வதற்காக அல்லது தீர்ப்பனவு செய்வதற்காக போதியளவான மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 164,953 ஆன நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்தல் தொடர்பில் 2018.11.29ஆந் திகதி இந்த திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிறைவேற்று உத்தியோகத்தருடன் கலந்துரையாடினர். அறவிடப்பட வேண்டிய மீதியான ரூபா 132,846 இனை அறவீடு செய்வது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. |

## 2.4 வணிகமல்லாத முற்பணக் கணக்கு

### 2.4.1 நானாவித முற்பணக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31ஆந் திகதியளவில் ரூபா 173,004,106 ஆன நானாவித முற்பணக் கணக்கின் நிலுவை மீதி மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 160,584,099 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம், நிலுவை மீதியில் ரூபா 18,741,792 அல்லது 11 சதவீதம் மாத்திரம் ஆண்டினுள் அறவிடப்பட்டிருந்தது. | பின்தொடர் நடவடிக்கைகளை முறைமைப்படுத்தி நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்காக போதிய நடவடிக்கைகள் முன்னடுக்கப்பட வேண்டியமை. | அரச கணக்குகள் திணைக்களத்தில் இது தொடர்பில் தொடர்ச்சியான பின்தொடர் நடவடிக்கைகள் இடம்பெறுவதுடன், நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு குறித்த நிறுவனங்களுக்கு அறிவுரைகள் மற்றும் தேவையான உதவிகள் வழங்கப்படும். |
| (ஆ) | 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக மாவட்டச் செயலகம், அமைச்சு மற்றும் 11 திணைக்களங்களுக்குரிய ஒட்டுமொத்த நிலுவை முற்பண மீதியாக ரூபா 160,584,099 ஆன மீதி காணப்பட்டதுடன், அவற்றுள் மாவட்டச் செயலகங்கள் மற்றும் 9 திணைக்களங்களுக்குரிய நிலுவைக் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 154,262,314 தொகை 05 வருட காலமாக முன்கொண்டுவரப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | பின்தொடர் நடவடிக்கைகளை முறைமைப்படுத்தி நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்காக போதிய நடவடிக்கைகள் முன்னடுக்கப்பட வேண்டியமை. | மாவட்டச் செயலகங்கள் மற்றும் குறித்த உப அலுவலகங்களுக்கிடையில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களுக்குரிய மாவட்டச் செயலாளர்களால் அறிக்கையிடப்படும் தகவல்கள் மாத்திரம் அரச கணக்குகள் திணைக்களத்திடம் காணப்படுவதுடன், இந்த உப முற்பணத்தின் நிலுவை மீதிகளை அறவீடு செய்வததற்காக அரச கணக்குகள் திணைக்களத்திற்கு நேரடியாக தலையீடு செய்யும் இயலுமை இல்லை. எவ்வாறான போதிலும், தொடர்ச்சியாக பின்தொடர்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு குறித்த நிறுவனங்களுக்கு தேவையான அறிவுரைகள் மற்றும் உதவியினை வழங்கி |

| | | | |
|---|---|---|---|
| | | | முற்பணங்களை அறவீடு செய்வதற்காக இடைத்தரகராக செயற்பட்டு குறித்த நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கப்படுகின்றது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். |
| (இ) | 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக 11 நிறுவனங்களுக்கு உரியதாக ரூபா 160,584,090 ஆன நிலுவைக் கடன் மீதிணை அறவீடு செய்தல் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | 2004/2005 ஆம் ஆண்டுகளின் போதுகொள்வனவு செய்வதற்காக மாத்தளை மாவட்டச் செயலகத்தினால் லக்கல நானாவித சேவைகள் கூட்டுறவு சங்கத்திற்கு விடுவிக்கப்பட்ட தொகையில் எஞ்சிய ரூபா 2,183,000 ஆன மீதி 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 5,000 ஆன மாதாந்த தவணைகளில் அறவீடு செய்வததற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறு அறவீடு செய்தல் இடம்பெற்றால் குறித்த எஞ்சிய தொகையை அறவீடு செய்ய சுமார் 36 வருடங்கள் எடுக்கும் என்பது அவதானிக்கப்பட்டது. | பின்தொடர் நடவடிக்கைகளை முறைமைப்படுத்தி நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்காக போதிய நடவடிக்கைகள் முன்னடுக்கப்பட வேண்டியமை. | மாத்தளை மாவட்டச் செயலகத்துடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் போது லக்கல நானாவித சேவைகள் கூட்டுறவு சங்கத்திற்கு மாதாந்தம் அறவீடு செய்யப்படும் ரூபா 5,000 தொகை போதுமானதாக இல்லாமையால், நிலுவைப் பணத்தை ஒரே தடவையில் தீர்ப்பனவு செய்வததற்கு அல்லது ஆகக் குறைந்தது மாதாந்தம் ரூபா 25,000 படியாக தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அறிவுரை வழங்கப்பட்ட போதிலும், லக்கல நானாவித சேவைகள் கூட்டுறவு சங்கத்திற்கு பொருளாதார பின்னடைவுடன் நடாத்திச் செல்லப்படுகின்றமை தொடர்பில் அந்த சங்கத்தின் பொது முகாமையாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளதாக மாத்தளை மாவட்டச் செயலாளரால் எனக்கு தெரிவிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு 2006ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த கொள்வனவு முற்பணங்களில் 2014ஆம் ஆண்டில் நிலவிய நிலுவை மீதியான ரூபா 12,560,031 இல் 2019 திசெம்பர் 31ஆந் திகதியளவில் ரூபா 1,793,880 மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், தொடர்ந்தும் நிலுவையாகவுள்ள மீதி ரூபா 10,766,151 ஆக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டினுள் எவ்வித பணமும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | கமநல அபிவிருத்தி திணைக்களத்துடன் நடாத்தப்பட்ட கூட்டத் தொடர்களில் நிலுவை முற்பண மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டிருந்தது.<br><br>எவ்வாறான போதிலும், குறித்த நிறுவனங்களை வரவழைத்து முற்பணைங்களை தீர்ப்பனவு செய்வததற்குரிய அறிவுரைகளை வழங்குவதற்கு கூட்டமொன்றினை நடாத்துவதற்குரிய பணிகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், ஏற்பட்ட தொற்றுநோய் நிலைமை காரணமாக அந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்ததுடன், எதிர்காலத்தில கூட்டங்களை நடாத்தி முற்பணங்களை தீர்ப்பனவு செய்வததற்கு பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு குறித்து வைத்துக்கொள்கின்றேன். |
| (iii) | குருநாகலை மாவட்டச் செயலகத்திற்குரிய 2008ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படும் ரூபா 349,477.50 ஆன கடடன் மீதியை அறவீடு செய்வததற்கு திணைக்களம் இதுவரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | குருநாகலை மாவட்டச் செயலகத்தினால் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய ரூபா 349,477 தொகையை தீர்ப்பனவு செய்யுமாறு குறித்த நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த பணத்தை அறவீடு செய்வததற்குரிய பணிகளை முன்னெடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்க குறித்துவைத்துக் கொள்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் கீழான அநுராதபுரம் போதனா மருத்துவமனையின் பாதுகாப்பு பெட்டகத்தில் காணப்பட்ட 2019 மார்ச் 02ஆந் திகதி களவாடப்பட்ட பணத்தை தீர்ப்பனவு செய்வதற்கு அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 321,785 ஆன முற்பணத்தினை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி | அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் இடம்பெற்றிருந்த பணம் களவாடப்பட்டமை காரணமாக ஏற்பட்டுள்ள நட்டத்தினை தீர்ப்பனவு செய்வததற்கு சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சிற்கு ரூபா 6,321,785 ஆன முற்பணம் வழங்கப்பட்டுள்ளது.<br><br>இது தொடர்பில் முழுமையான அறிக்கையொன்றினை இந்த திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குறித்த நிறுவங்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |
| (v) | அநுராதபுரம் மாவட்டச் செயலகத்தில் 2015ஆம் ஆண்டிற்குரியதாக அறவீடு செய்யப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 38,097,815 தொகையில் 2019 திசெம்பர் 31ஆந் திகதியளவில் உள்படியான நிலுவை மீதி ரூபா 34,033,861 ஆக காணப்பட்டதுடன், அதன் பிரகாரம் 2019ஆம் ஆண்டின் இறுதியளவில் அறவீடு செய்யப்பட வேண்டிய தொகையாக ரூபா 4,063,954 அல்லது 11 சதவீதம் காணப்பட்டது. அதன் பிரகாரம் நிலுவைப் பணத்தினை அறவீடு செய்வதில் மந்தமான நிலையொான்று அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | பெரும்பாலான கமநல சேவை மத்திய நிலையங்கள் மற்றும் பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் பொருளாதார பின்னடைவுடன் நடாத்திச் செல்லப்படுகின்றமையால், நிலுவைப் பணத்தினை துரிதமான அறவீடு செய்தல் கடினமாகியுள்ளதுடன், நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்காக தொடர்ந்தும் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு குறித்துவைத்துக் கொள்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (vi) | பொலன்னறுவை மாவட்டச் செயலகத்திலிருந்து 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக அறவீடு செய்யப்பட வேண்டிய நிலுவை மீதி ரூபா 55,927,666 ஆக காணப்பட்டதுடன், அது மீளாய்வாண்டிற்கான ஒட்டுமொத்த நிலுவைப் பணத்தின் 35 சதவீதமாகும். அவற்றுள் 2018ஆம் ஆண்டினுள் நெல் சந்தைப்படுத்தல சபையின் குரப்பு சந்தியிலுள்ள அரிசி ஆலையை நடாத்தியமையின் நட்டமான ரூபா 769,428 மற்றும் உணவு ஆணையாளருக்கு அரசி விநியோகத்திலான நட்டம் ரூபா 13,018,114 தொடர்பில் நிதிப்பிரமாணம் 109 மற்றும் 113 இன் பிரகாரம் செயற்பட்டு உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன், 2019 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | ரூபா 13,018,114 ஆன நட்டத்திற்காக நி.பி. 109 மற்றும் 113 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ள வீண்ணப்பங்கள் இதுவரையிலும் எமது திணைக்களத்திற்கு கிடைத்திருக்கவில்லை என்பதுடன், அது தொடர்பான பின்தொடர் பணிகளை மேற்கொள்ள குறித்துவைத்துக்கொள்கின்றேன். |
| (vii) | கொழும்பு பொது மருத்துவமனையில் பற்சிகிச்சை நிலையத்தின் 2002 | - மேற்படி - | கொழும்ப் பற்சிகிச்சை நிலையத்தில் இடம்பெற்ற சம்பளக் கொள்ளைக்கு உரியதாக மாளிகாகந்த |

| | | | |
|---|---|---|---|
| | சனவரி 22ஆந் திகதி இடம்பெற்றிருந்த சம்பளக் கொள்ளைக்குரிய பணிப்பாளர் பொது மருத்துவமனை – கொழும்பு இற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 2,408,460 ஆன முற்பண மீதி, 2019 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் அறவீடு செய்வதற்கு அல்லது நட்டமாக புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரிக்கப்பட்டவாறு உள்ளதுடன், குறித்த வழக்கு பணிகள் நிறைவடைந்த பின்னர் இது தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது. |
| (viii) | திருகோணமலை மாவட்ட செயலகத்தில் 2016ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படும் ரூபா 1,652,917 ஆன நிலுவை மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு சதொச நிறுவனத்திற்கு நிதி இயலுமை இல்லாதிருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறே, குறித்த மீதியை பதிவழிப்பதற்காக நி.பி 109 இன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | அந்த பணத்தை பதிவழிப்பதற்காக திருகோணமலை மாவட்டத்தின் செயலாளரால் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பரிந்துரையடன் சமர்ப்பிக்கப்பட்ட நி.பி. 109 விண்ணப்பங்கள் போதியளவான சான்றுகள் இல்லாதிருந்த காரணத்தால் மேலதிக நடவடிக்கைகளுக்காக அரச நிதித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| | | - | |
| (ix) | அம்பாறை மாவட்ட செயலகத்தின் 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான நிலுவை மீதி ரூபா 45,499,095 ஆக காணப்பட்டதுடன், அது ஒட்டுமொத்த | - மேற்படி - | அம்பாறை கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு, அறவீடுகளை புறக்கணித்துள்ள கமநல அபிவிருத்தி நிலையங்களுக்கு எதிராக |

| | | |
|---|---|---|
| நிலுவைத் தொகையில் 28 சதவீதம் ஆகும். 2019ஆம் ஆண்டினுள் குறித்த நிலுவைத் தொகையில் ரூபா 200,000 அல்லது 0.44 சதவீதம் மாத்திரம் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையும், நீதிமன்ற நடவடிக்கைகளுடாக பணத்தை அறவீடு செய்வதற்கு எதிர்பார்ப்பதாகவும், உளவு ஆணையாளர் திணைக்களம் மற்றும் சதொச நிறுவனத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த பெறுபேறுகளைப் (Out Come) பெற்றுக்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2019ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், முற்பண ‘‘பீ’’ கணக்குகளை மேற்பார்வை செய்தல் திணைக்களத்தின் பிரதான பணியொன்றான போதிலும், தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டவாறு 70 நிறுவனங்களுக்குரிய பல வருடங்களாக முன்கொண்டுவரப்படுகின்ற முற்பண ‘‘பீ’’ கணக்குகளில் ஓய்வுபெற்றுள்ள, மரணமடைந்த, பணி வறிதாக்கப்பட்ட மற்றும் சேவையை விட்டுச்சென்றவர்களுக்குரிய ரூபா 602,462,162 ஆன கூட்டுத்தொகையான அறவிடப்படாத மீதிகள் | திணைக்களதின் பிரதான பணிகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | முற்பண ‘‘பீ’’ கணக்குகளை பகுப்பாய்வு செய்தபின்னர் மிகவும் உயர்வான மட்டத்தில் காணப்படும் 10 நிறுவனங்கள் முதலாவது தொகுதியாக தெரிவு செய்யப்பட்டு, அவற்றுள் 7 நிறுவனங்களை இதுவரையிலும் வரவழைத்து கலந்துரையாடல் மேற்கொண்டு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய 3 நிறுவனங்கள் எதிர்காலத்தில் வரவழைப்பததற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | நிலவின. மேலும், 2018 சனவரி 01ஆந் திகதி முதல் ஓய்வுபெற்றுச் சென்றுள்ள மற்றும் மரணமடைந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்குரிய அறிவுரைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்தல் தொடர்பில் அண்மைக் காலங்களில் அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 243/2015 ஆம் இலக்க மற்றும் 2015 யூன் 24ஆந் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம், 6003 தொகுதியின் வைப்புக் கணக்கினை பூச்சியமாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன், 2016ஆம் ஆண்டு முதல் அந்த பணிகள் வருடாந்த மதிப்பீடுகளினூடாக மேற்கொள்ளுமாறு அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறான போதிலும், 6003ஆம் இலக்கத்தின் கீழான 3 வைப்புக் கணக்குகளின் ரூபா 10.111 மில்லியன் கூட்டுப்பெறுமதியான மீதியை தீர்ப்பனவு செய்யாது தொடர்ந்தும் முன்கொண்டுசெல்லப்பட்டவாறு காணப்பட்டது. | எதிர்பார்த்த பெறுபேற்றினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | இந்த மீதிகளிடையே கொழும்பு மாவட்ட செயலகத்தின் ரூபா 10 மில்லியனான வரவு மீதி அரச கணக்குகள் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டு பதிவழிப்பதற்கும், இரத்தினபுரி மாவட்டச் செயலகத்தின் ரூபா 108,029 ஆன மீதியை திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்திற்கு அனுப்பி அங்கீகாரத்தினை பெற்றுக்கொண்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 2018ஆம் ஆண்டுக்கான பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம், எதிர்வரும் 10 வருட காலப்பகுதியினுள் நிதிக்கூற்றுக்களை அட்டுறு அடிப்படையில் தயாரிப்பதற்காக முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக 2018 ஒக்தோபர் 02ஆந் திகதி அமைச்சரவையின் | பாதீட்டு முன்மொழிவுகளினூடாக எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை உரிய காலப்பகுதியினுள் நிறைவேற்ற வேண்டியமை. | அடிப்படை வீதித் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாமை ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் , எதிர்காலத்தில் அதற்கு தற்போதைய செயன்முன்னேற்றத்தினையும் உள்ளடக்கி |

| | | |
|---|---|---|
| அங்கீகாரம் கிடைத்திருந்தது. எனினும், அந்த அமைச்சரவை அங்கீகாரத்திற்குரியதாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த வீதித் திட்டத்தில் (Road Map) உள்ளடக்கப்பட்டுள்ள பணிகளுக்குரிய காலச்சட்டகம் உரிய அங்கீகாரமின்றி திணைக்களத்தினால் திருத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. | | அமைச்சரவையின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. |
| i. ஆரம்ப வதி திட்டத்தின் பிரகாரம், 2020ஆம் ஆண்டின் போது திருத்தப்பட்ட வீதித் திட்டத்தின் பிரகாரம் 2021ஆம் ஆண்டின் போது நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த துடன், அரச சொத்துக்களை இனங்காணல், அளத்தல் மற்றும் வெளிப்படுத்துவதற்குரிய பணிகள் 2022ஆம் ஆண்டு நிறைவடையும் தருவாயில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அவ்வாறே, காணி மற்றும் கட்டிடங்கள் உள்ள அனைத்து அரச நிறுவனங்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படாமையால், அந்த அனைத்து நிறுவனங்களையும் சரியான இனங்கண்டுள்ளதாக கணக்காய்வின் போது சான்றுபடுத்த முடியாதிருந்தது. | - மேற்படி - | அதற்கு மேலதிகமாக போதுமான செயன்முன்னேற்றமொன்று காண்பிக்கப்பட்டதுடன், 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 1,355 பில்லியன் பெறுமதியுடைய நிதியல்லாத சொத்துக்கள் 2020 ஒக்தோபர் மாதமளவில் ரூபா 1,389 பில்லியன் வரையிலும் அதாவது ரூபா 34 பில்லியன் கணக்கு வைக்க முடியுமானதாக காணப்பட்டது. இந்த பணி 2022ஆம் ஆண்டளவில் முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| ii. | அடிப்படைத் திட்டத்தின் பிரகாரம், 2020ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த பொறுப்புகளை இனங்காணல், அளவீடுகள் மற்றும் வெளிப்படுத்தல் பணகள் திருத்தப்பட்ட திட்டத்தின் மூலம் 2022ஆம் ஆண்டு வரையிலும் தாமதிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | 2020ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக அந்த பணிகளை பூர்த்தி செய்வதற்கு 2022ஆம் ஆண்டு வரையிலும் நீடிப்பதற்கு நேர்ந்தது. |
| iii. | அடிப்படை வீதித் திட்டத்தின் பிரகாரம், 2021ஆம் ஆண்டின் போது நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்களை இனங்காணல், அளவைகள் மற்றும் வெளிப்படுத்தல் பணிகள் திருத்தப்பட்ட திட்டத்தின் மூலம் 2027ஆம் ஆண்டு வரையிலும் தாமதிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | அட்டுறு அடிப்படையில் கணக்குகளை அறிக்கையிடல் 2027ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றமையால், அந்த பணிகள் 2027ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |